[20th January 1965

செங்கம் நகரில் அரிசன மாணவர் விடுதி

* 32 கேள்வி.—திரு. ஏ. ஆறுமுகம் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கம் நகரத்தில் சர்க்கார் அரிசன மாணவர் விடுதி கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) செங்கம் நகரில் உள்ள அரசாங்க மாணவர் விடுதிக்காக நல்ல கட்டிடம் ஒன்றை 1964-65-ல் கட்டுவதற்காக அரசாங்கம் ரூபாய் 57,900 அனுமதித்துள்ளது. அதற்கான வரைபடங்களும் மதிப்பீடுகளும் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. அவ்வேலை நடைபாண்டில் நிறைவேற்றப்படுவதற்காகப் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஆறுமுகம் : திருவண்ணாமலையில் கட்டப்படுகிற ஹாஸ்டலில் நிலைமை எந்தளவிலிருக்கிறது ?

MR. SPEAKER : The hon. Member first asked about 'Chengam' in the main question. The supplementary question is about Tiruvannamalai. The question therefore does not arise.

இந்திய அரசாங்க நிதி மந்திரியால் கூட்டப்பட்ட மாநாடு

* 33 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய அரசாங்க நிதி அமைச்சர் அண்மையில் குற்றாலத்தில் மாநில அரசாங்க உயர் அதிகாரிகள், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோரின் மாநாடு ஒன்றைக் கூட்டினாரா ?

(இ) அம் மாநாட்டின் நோக்கம் என்ன ?

(உ) அதற்கான செலவை மாநில அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா அல்லது இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) & (இ) திட்ட வளர்ச்சிக் கமிஷனர், உணவு-வேளாண்மைத் துறைச் செயலாளர், வேளாண்மைத் துறை நெறியாளர் ஆகியோர் இந்திய அரசாங்க நிதி அமைச்சர் குற்றாலத்தில் முகாமிட்டிருந்தபோது அவரைச் சந்தித்தனர். இந்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் விரைவுத் திட்டத்தின்கீழ் Crash Programme இம் மாநில அரசாங்கம் சமர்ப்பித்துள்ள திட்டங்கள் குறித்து இந்திய அரசாங்க நிதி அமைச்சின் கருத்து என்ன என்பதைத் தெரிந்துகொள்ள அவர்கள் நிதி அமைச்சரைச் சந்தித்தனர்.

(உ) அதிகாரிகளின் பயணப்படி தவிர வேறெந்தச் செலவும் ஏற்படவில்லை.

திரு. து. ப. அழகமுத்து: இந்தக் கேள்விக்கு பதில் கிடைப்பதற்கு நீண்ட காலதாமதமாகி விட்டது. நிதி அமைச்சர் அவர்கள் குற்றாலத்தில் தங்கியிருந்தபோது அதிகாரிகள் சென்று விவாதித்

20th January 1965]

ததாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் குற்றாலத்திற்குப் போவதற்கு முன்னால் சென்னையில் இருந்து விட்டுத்தான் குற்றாலத்திற்குப் போனார்கள். ஆகவே இந்த விவாதங்களை இங்கேயே வைத்துக் கொண்டிருக்கலாமே . . .

MR. SPEAKER : All these things depend upon the convenience of the Union Minister, Sri T. T. Krishnamachari. Was Sri Krishnamachari prepared to hold a conference with Madras officials in Madras—that question cannot be asked here. It depends on the convenience of the Minister. How can any Minister here give an answer to it ?

திரு. து. ப. அழகமுத்து: அதிகாரிகள் போவதற்குச் செலவு ஆகியிருக்கிறது.

MR. SPEAKER : That cannot be helped.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சிறிது செலவாகியிருந்தாலும் பரவாயில்லை, அதற்கேற்ற பலன் இருந்தால் பாராட்டலாம். இந்த மகாநாட்டின் விளைவாக என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன ? அதன் மூலம் நம் ராஜ்யத்திற்கு ஏற்பட்ட நன்மை என்னவென்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: கால்நடை அபிவிருத்தி செய்வதற்கு, மீன் வளம் பெருகுவதற்கு, டெய்ரி மில்க் சம்பந்தப்பட்டது இவற்றிற்காக மத்திய அரசாங்கத்தை நாடினோம், நிதி அமைச்சர் அவர்களை நாடினோம். அவர்கள் ஒத்தாசை செய்திருக்கிறார்கள். ஒரு கோடிக்கு மேல் இப்போது கொடுத்திருக்கிறார்கள். முழு விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டம்

* 34. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உணவு உற்பத்தியில், நம் மாநில அரசின், ஒவ்வோராண்டின் குறிக்கோளும் சாதனையும் எவ்வளவு ?

(இ) குறிக்கோளைவிட சாதனை அதிகமா ? குறைவா ?

கனம் திரு. பூ. கக்கன் :

ஆண்டு.			கூடுதல் உற்பத்தித் திறன் குறித்த இலக்கு.	சாதனை.	சதவீதம்.
(1)			(2)	(3)	(4)
(அ)					
1961-62	..	..	3·17	2·27	71·6
1962–63	..	..	4·38	3·10	70·7
1963–64	..	..	2·26	3·29	145·5
• மொத்தம்		..	9·81	8·66	88·2